ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/30 - 2017 ජූලි මස 26 වැනි බදාදා - 2017.07.26

*2029/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், நகர அபிவிருத்தி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின்பேரில் இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியானது, எஹலியகொட நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின்கீழ் பேரூந்து தரிப்பிடத்தை மீள் நிர்மாணிப்பதற்காக உடனடியாகத் தேவைப்படுகிறதென்பது எனது அபிப்பிராயமானதால் குறிப்பிட்ட காணிப்பகுதியானது தொடர்புடைய நோக்கத்திற்காகத் தேவைப்படுகிறதென்பதை இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2017, யூலை 25.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எஹலியகொட பிரதேச செயலகப் பிரிவில், பல்லேபத்துவ சிறு பிரிவில் கெந்தகமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2016.06.17 ஆந் திகதியிடப்பட்ட R/ EHL/ 2015/ 994 ஆம் இலக்க உயர் பதிவெடுப்பில் A ஆம் இலக்கத்தினால் காட்டப்பட்டுள்ளதுமான 01 ஏக்கர் 00றூட் 12.01 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள காணிக்குரிய எல்லைகள் பின்வருமாறு :

வடக்கு : எஹலியகொட பிரதேச சபைக்குச் சொந்தமான நிலம் மற்றும் இ/ எஹலியகொட மத்திய மகா வித்தியாலயம் அமைந்துள்ள புஸ்செல்லகேஹேனே வத்த ;

கிழக்கு : இ/ எஹலியகொட மத்திய மகா வித்தியாலயம் அமைந்துள்ள புஸ்செல்லகேஹேனே வத்த மற்றும் துண்டு இல. B ;

தெற்கு : துண்டு இல. B, எல். ஆர். தர்மசிறி மற்றும் ஏனையோர் உரிமை கோரும் புஸ்செல்லகேஹேனே தெனிய மற்றும் பாதை (வீ. அ. அ.) ;

மேற்கு : எல். ஆர். தர்மசிறி மற்றும் ஏனையோர் உரிமை கோரும் புஸ்செல்லகேஹேனே தெனிய, வீதி (வீ. அ. அ) மற்றும் எஹலியகொட பிரதேச சபைக்குச் சொந்தமான நிலம் அமைந்துள்ள புஸ்செல்லகேஹேனே வத்த.

8-369

1A – G 25970 – 17 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.